# மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர் - 5

எண்: 57/2021 நாள்: 11.04.2021

**சுற்றறிக்கை**

**பொருள்:** இணையத்தளத்தில் ஏப்ரல் 2021 மாதிரித் தேர்வு மதிப்பெண்களை உள்ளீடு செய்தல் - குறித்து.

**பார்வை:** தேர்வு நெறியாளர் அலுவலக சுற்றறிக்கை எண்: 56 நாள்: 10.04.2021

பார்வையிற்கண்ட சுற்றறிக்கையின்படி, பேராசிரியர்கள் பூர்த்தி செய்யவேண்டிய ஏப்ரல் 2021 மாதிரித்தேர்வு மதிப்பெண் பட்டியல்கள் (Hard Copies) துறைகளில் தரப்பட்டுள்ளன. துறைத்தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட Model Exam மதிப்பீடு செய்பவர்தம் பட்டியலைக் கொண்டு ஒவ்வொரு பேராசிரியருக்கும் தனித்தனியே மதிப்பெண்கள் உள்ளீடு செய்யும் வகையில் Staff Portal தற்போது தயாராகியுள்ளது. எனவே, எப்ரல் 2021 மாதிரித் தேர்வுகள் துவங்கி இனிவரும் அனைத்து அகமதிப்பீட்டு மதிப்பெண்களையும் பேராசிரியர்கள் தாமே www.rsgccoe.com வலைத்தளத்தில் நேரடியாக உள்ளீடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மதிப்பெண்களை உள்ளீடு செய்யக் கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றவும்.

பேராசிரியர்கள் www.rsgccoe.com வலைத்தளத்திலுள்ள 'Staff Login' -ல் தம் Email Address -ஐயும், Password "(=phone number)" -ஐயும் பதிவு செய்து உள்நுழையவும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக Password -ஐ பேராசிரியர்கள் மாற்றிக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வலைப்பக்கத்தின் இடது பக்கத்தில் உள்ள Degree, Course, Subject, Shift, Medium, Section, Component ஆகியவற்றுள் தங்கள் தெரிவுகளைப் பூர்த்திசெய்து Submit செய்தால், சார்ந்த பாடத்திற்குரிய மாதிரித்தேர்வு மதிப்பெண்களை உள்ளீடு செய்யும் பக்கம் திரையில் தோன்றும். அவ்வப்போதோ, அனைத்து மாணவர்களுக்கும் மதிப்பெண்களை வழங்கியபின்னரோ 'SAVE' செய்வதன்மூலமாக, மதிப்பெண்களைத் தற்காலிகமாக வலைத்தளத்திலேயே சேமித்துவைக்கலாம். அனைத்து மதிப்பெண்களையும் சரியாக உள்ளீடு

செய்ததை உறுதி செய்தபின் 'LOCK' செய்யவும். 'LOCK' செய்தபின்னர் மதிப்பெண்களை மாற்றம் செய்ய இயலாது. 'LOCK' செய்தபின்தான் மதிப்பெண் உள்ளீடு முழுமையடையும். மதிப்பெண் பட்டியலை 'Print' செய்து, பேராசிரியர்கள் தன்வசம் வைத்துக்கொள்வதுடன் துறைத்தலைவர்களின் ஒப்புதலுடன் மாணவர்களின் புலனக் குழுவிலும் பகிர்ந்துகொள்ளலாம்.

'Reset' தெரிவின் மூலமாக பேராசிரியர்கள் தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அடுத்தடுத்த பாடங்களையும் இவ்வாறே தெரிவுசெய்து மதிப்பெண்களைப் பதிந்து 'LOCK' செய்யவேண்டும்.

நம் கல்லூரியின் இந்த E-Governance முயற்சியில் தங்களுக்கு இடர்பாடுகள் ஏதேனும் ஏற்படின் தேர்வு நெறியாளர் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும். தவிர்க்கவியலாத சூழலில் மட்டும் தங்கள் துறையில் பார்வையிற்கண்ட சுற்றறிக்கையோடு தரப்பட்டிருந்த மதிப்பெண் பட்டியல்களைப் பூர்த்திசெய்து, துறைத்துலைவர்கள் வழியாகத் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் 16.04.2021 -க்குள் சமர்ப்பிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

11.4.2021

தேர்வு நெறியாளர்
தேர்வு நெறியாளர்
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

முதல்வர்
முதல்வா
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.